# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.09.04

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 08/2016 (ii)

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**விரிவுரையாளர் (தகுதிகாண்), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் தரம் I - (மருத்துவம் / பல் மருத்துவம்) மற்றும் (மருத்துவம் / பல் மருத்துவம்) அல்லாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ளல்.**

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துடன் தொடர்புடைய 2016.11.17 ஆம் திகதிய 08/2016 (i) ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஊடாக திருத்தப்பட்டவாறான 2016.06.14 ஆம் திகதிய 08/2016 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. 08/2016 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் இறுதி உறுப்புரையை திருத்தியமைப்பதற்கு, 2017.07.20 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 968 ஆவது சபை அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க, 08/2016 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 04 ஆம் பந்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது ;

> “04. சகல பீடங்களிலும் குறைந்தது ஒரு வருட காலத்தைக் கொண்ட குறிப்பிட்ட துறையில் முழு நேரக் கற்கை முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தலானது விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை பதவியில் உறுதிப்படுத்துவதற்கு மற்றும் U-AC 3 (III) சம்பள அளவுத் திட்டத்தில் இருத்துவதற்கு மாத்திரம் போதுமான தகைமையாக இருக்கும். எவ்வாறாயினும், அவ்வாறான முதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கு பதிவு செய்வதற்கு முன்னர் கற்கைப் பிரிவுத் தலைவர், குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதி மற்றும் உபவேந்தரின் சிபாரிசின் அடிப்படையில் பட்டத்தின் ஏற்புடைத்தாகும் தன்மையை (பொருத்தப்பாட்டை) பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை (செனட்) அங்கீகரித்தல் வேண்டும். நிர்வாக சபையின் (செனட்டின்) அங்கீகாரத்தை பாடநெறி பற்றிய விபரத்துடன் அங்கீகாரத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.”

03. இந்தத் தீர்மானம் 2017 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

04. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.

11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள்/சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/106